**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்.**

2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் நாள் புதன்கிழமை
திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீவிசுவாவசு வருடம், கார்த்திகைத்திங்கள் 03 ம் நாள்

**E.P.No. 13/2016**

**in**

**O.S.No. 34/2014**

1. T.பேச்சிமுத்து
2. C.S.சிவக்குமார்
3. B.பிரேமலதா ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

A.G.நடராஜன் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக கடந்த 31.10.2025 அன்று இறுதி விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.A.கனகராஜ், B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.பூபதி, B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு சாட்சியங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இரு தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.,

**உத்தரவு**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் சமரச தீர்ப்பாணை 5 மற்றும் 6 வது காலங்களில் விவரிக்கப்பட்டுள்ள தொகை ரூ.7,50,000/– வாதிகளுக்கு

பிரதிவாதியால் கிடைக்கும் பொருட்டு சிபுகோ கட்டளை 21 விதி 37ன்படி பிரதிவாதிக்கு நோட்டீஸ் அனுப்பி பிரதிவாதி தொகை செலுத்த தவறும் பட்சத்தில் சிபுகோ பிரிவு 55ன் படி பிரதிவாதியை வாரண்டில் பிடித்து சிவில் ஜெயிலில் வைத்து தொகை வசூல் செய்து கொடுக்க உத்தரவிட வேண்டும்படிக்கும் மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணையின் 10வது கட்டளைப்படி சமரச தீர்ப்பாணை செட்யூல் 3ல் கண்டுள்ள இயந்திரங்களை அகற்றி எடுத்துக் கொள்ள வாதி தாவா/மனு சொத்துக்கு சென்றபோது பிரதிவாதி மேற்படி இயந்திரங்களை அகற்ற விடாமல் தடுத்து விட்டபடியால் நீதிமன்ற அமீனா மூலம் உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 35 மற்றும் பிரிவு 151ன்படியும் வாதிகளுக்கு மனு சொத்துக்களை சுவாதீனம் செய்து கொடுக்க உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் ஆர்டர் 21 ரூல் ll(2)ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-</u>**

i) இம்மனுவின் மனுதாரர்கள்/வாதிகளால் அ.வ.எண்.34/2014 என்ற வழக்கானது எதிர்மனுதாரர்/பிரதிவாதி மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பின்னிட்டு மேற்படி வழக்கில் உபய தரப்பினர்களுக்கிடையே பைசல் ஏற்பட்டு கடந்த 01.03.2014 அன்று சமரச இறுதிநிலை தீர்ப்பாணை இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே சமரச தீர்ப்பாணை 5 மற்றும் 6 வது காலங்களில் விவரிக்கப்பட்டுள்ள தொகை ரூ.7,50,000/- வாதிகளுக்கு பிரதிவாதியால் கிடைக்கும் பொருட்டு சிபுகோ கட்டளை 21 விதி 37ன்படி பிரதிவாதிக்கு நோட்டீஸ் அனுப்பி பிரதிவாதி தொகை செலுத்த தவறும் பட்சம் சிபுகோ பிரிவு 55ன் படி பிரதிவாதியை வாரண்டில் பிடித்து சிவில் ஜெயிலில் வைத்து தொகை வசூல் செய்து கொடுக்க உத்தரவிட வேண்டும்படிக்கும் மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணையின் 10வது

கட்டளைப்படி சமரச தீர்ப்பாணை செட்யூல் 3ல் கண்டுள்ள இயந்திரங்களை அகற்றி எடுத்துக் கொள்ள வாதி தாவா/மனு சொத்துக்கு சென்றபோது பிரதிவாதி மேற்படி இயந்திரங்களை அகற்ற விடாமல் தடுத்து விட்டபடியால் நீதிமன்ற அமீனா மூலம் உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 35 மற்றும் பிரிவு 151ன் படியும் வாதிகளுக்கு மனு சொத்துக்களை சுவாதீனம் செய்து கொடுக்க உத்தரவிட வேண்டும் என்பதே மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

**2. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :–**

i) மனுதாரர்கள் மனு பொய்யானது, மோசடியானது, சட்டப்படி நிலைக்கதக்கதல்ல. இந்த எதிர்மனுதாரர் இந்த எதிருரையில் வெளிப்படையாக ஒப்புக் கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவராவார்கள்.

ii) மனுதாரர்கள் எதிர்மனுதாரர் பேரில் அ.வ.எண்.34/2014 வழக்கை தாக்கல் செய்து அதில் கடந்த 01.03.2014ம் தேதியில் சமரச இறுதிநிலைத் தீர்ப்பாணை ஏற்பட்டுள்ளது. அதில் ஏற்பட்டுள்ள ஷரத்துக்களின்படி மனுதாரர்கள் நடந்து கொள்ளாமல் 3 மாத வாடகைப் பாக்கியும் மின்சாரக் கட்டணப் பாக்கியும் வைத்திருந்ததில் எதிர்மனுதாரர் தனது வழக்கறிஞர் மூலமாக கடந்த 27.06.2015ல் அறிவிப்பு அனுப்பினார். அதை 3ம் மனுதாரர் மட்டும் 29.06.2015ல் பெற்றுக் கொண்டு மற்றவர்கள் திருப்பி அனுப்பி விட்டார்கள். பிறகு கடந்த 07.07.2015ம் தேதியிட்டு 1ம் மனுதாரர் சார்பில் அவரது வழக்கறிஞரிடமிருந்து வாதிகள் பதில் அனுப்பினார்கள். மேலும் மேற்படி 07.07.2015ம் தேதியிட்ட அறிவிப்பை சமரச இறுதிநிலைத் தீர்ப்பாணைப்படி 3

மாத கால அறிவிப்பாக எடுத்துக் கொள்ள வேண்டியது என்றும், அந்த அறிவிப்புப்படி வாடகை ஒப்பந்தம் முடிவுக்கு கொண்டு வந்துள்ளதாகவும் வாதிகள் தரப்பில் சொல்லப்பட்டு வாடகை ஒப்பந்தம் அவர்களாலேயே முறித்துக் கொள்ளப்பட்டது.

iii) மேற்படி வீதம் ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டுவிட்ட மனுதாரர்கள் சமரச இறுதிநிலைத் தீர்ப்பாணைப்படி நடந்து கொள்ளவில்லை. எதிர்மனுதாரரிடமிருந்து SILO Machinary – Vertical Cement Products என்ற இயந்திரங்களுக்காக மனுதாரர்கள் M/S. ESS JAY KAY Industries க்கு செலுத்த வேண்டிய தொகை செலுத்தவில்லை. அந்த இயந்திரங்கள் தான் சமரச ஷரத்துக்களின்படி செட்யூல்–3 ல் கண்டுள்ளவைகளாகும். அவற்றை அட்வான்ஸ்க்குப் பதிலாக கம்பெனி பில் படி ரூ.20,00,000/–க்கு எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு விற்றுள்ளார். எனவே மேற்படி இயந்திரக் கம்பெனிக்கு மனுதாரர்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையைச் செலுத்தாமல் இருந்து வந்துள்ளார்கள். அதன் கேட்பு அறிவிப்பு மேற்படி கம்பெனியிடமிருந்து 20.04.2015 மற்றும் 22.07.2015 தேதிகளில் எதிர்மனுதாரருக்கு வந்ததன் அடிப்படையில் எதிர்மனுதாரர் மேற்படி இயந்திரங்கள் வாங்கிய நிலுவைத்தொகையை மனுதாரர்கள் செலுத்த வேண்டும் என்றும் அவ்வாறு இல்லாவிடில் 07.07.2015 அறிவிப்புப்படி முடிவுக்கு வந்துள்ள வாடகை ஒப்பந்தப்படியான சமரச தீர்ப்பாணை ஷரத்துக்களின்படி மனுதாரர்கள் அவர்களது இயந்திரங்களை அகற்றிக் கொள்ள முடியாது என்றும் 28.07.2015 ம் தேதியில் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பியிருந்தார்.

iv) பின்னிட்டு பல மாதங்களுக்குப் பிறகு மனுதாரர்கள் அந்த நிலுவைத் தொகையை மேற்படி கம்பெனிக்கு செலுத்தினார்கள். 1ம் மனுதாரர் மேற்படி

தொகையை செலுத்திவிட்டது குறித்து மேற்படி கம்பெனியிலிருந்து 02.02.2016 தேதியில் தங்களது வழக்கறிஞர் மூலம் கடிதமும் அனுப்பியுள்ளார்கள். ஆனால் அதற்கிடையே முன்னதாக எதிர்மனுதாரர் தான் மேற்படி நிலுவைத் தொகையை செலுத்த வேண்டும் என்று மனுதாரர்கள் 04.08.2015 ல் அறிவிப்பு அனுப்பினார்கள். M/S. ESS JAY KAY Industries க்கு நிலுவை பாக்கிக்கும் தங்களுக்கும் சம்பந்தமில்லை என்று அதில் சொல்லியிருந்தார்கள். பின்னிட்டு மேற்கூறியபடி அவர்களே நிலுவையைச் சரி செய்தார்கள்.

v) வாடகை முறிவுக்காக அறிவிப்புக் கொடுத்த 3 மாத காலத்துக்குள் அனைத்து ஆவணங்களையும் சரி செய்து கொடுத்தும் அனைத்து அரசாங்க துறைகளிடம் பெற்றுள்ள உரிமங்களின் நிபந்தனைகளை சரி செய்து கொடுத்தும், தாவா சொத்தை வில்லங்க சுத்தியாக ஆவணங்கள் ஏற்படுத்திக் கொடுத்துவிட்டும் செட்யூல்–3 இயந்திரங்களை அகற்றிக் கொள்ள மனுதாரர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும் எதிர்மனுதாரரின் இயந்திரங்கள் பழுதுநீக்க ஆகும் செலவை Estimate செய்து எதிர்மனுதாரருக்குச் செலுத்தவும் முயற்சிக்கவில்லை. நாளது வரை வாடகை பாக்கியும் செலுத்தவில்லை. மின் கட்டணமும் செலுத்தாமல் இருந்து வருகிறார்கள்.

vi) மேலும் மனுதாரர்கள் தாவாச் சொத்தில் வாடகைக்குப் பெற்று M.S. ஆர்யா சிமெண்ட்ஸ் என்ற பெயரில் நடத்தி வந்த சிமெண்ட் நிறுவனத்திற்காக மார்ச் 2015 முதல் செப்டம்பர் 2015 வரை மேட்டூர் அனல்மின் நிலையத்தில் உலர் சாம்பல் எடுத்து அதற்கு நிலுவைக் கட்டணமாக ரூ.15,22,387/– செலுத்த வேண்டி பாக்கியுள்ளதாகவும் அவ்வாறு செலுத்தாத பட்சம் எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட மின் இணைப்பான 076–006–61 ல் மின் கட்டணத்துடன் சேர்த்து வசூலிக்கப்படும் என்று மின்சார வாரியம் 26.09.2016 ல் அறிவிப்பு

அனுப்பியுள்ளது. அதற்கு எதிர்மனுதாரர் 28.09.2016 ல் தகுந்த பதிலறிவிப்பும் அனுப்பியுள்ளார். எனவே மேற்படி தொகையை சரி செய்து தரவேண்டிய கடப்பாடு மனுதாரர்களுக்கே உரியதாகும்

vii) சமரச தீர்ப்பாணைப்படி மேற்படி கெடுவுக்குள் செய்து தர வேண்டிய ஆவணபூர்வமான சங்கதிகளை மாற்றித்தரவும், நிலுவைத்தொகை பாக்கிகளை செலுத்தாமலும் இருந்து கொண்டுள்ளதோடு தாவா சொத்தை அமைதியான முறையில் அனுபவிக்க முடியாமல் எதிர்மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்படுத்தியுள்ளார்கள். மனுதாரர்கள் குறித்த கெடுவிற்குள் சமரச தீர்ப்பாணையின்படி நடந்து கொள்ளாமல் இருந்து வருவதில் நாளதுவரை சுமார் 15 மாதங்களுக்கு வாடகை நஷ்டம் கொடுக்கவும் இயந்திரம் பழுதாகியிருப்பதில் அதை சரி செய்து கொடுக்கும் வகையில் கணக்கிட்டு அதற்கான தொகையை செலுத்தவோ இயந்திரங்களை பழுதுநீக்கி கொடுக்கவோ நடவடிக்கையும் எடுக்கவும் நாளதுவரை மின்சார கட்டணம் பாக்கி உள்ளதை செலுத்தவும் முன்வராமல் இருந்து வருகிறார்கள். எனவே மேற்படி பாக்கிகள் அனைத்தையும் ஒப்புக் கொண்டுள்ளபடி நேர் செய்த பிறகு தான் மனுதாரர்கள் எவ்வித பரிகாரமும் கோர முடியும். மேலும் வாடகை ரத்து அறிவிப்பு கொடுத்த பிறகு சுமார் 1 வருட காலம் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து வருவதில் மனுதாரர்கள் மேல் நடவடிக்கை எடுக்கவும், தாவா பரிகாரம் கோரவும் காலக்கெடுவால் தடைபடுகிறார்கள்.

viii) மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தில் அவர்களது சான்றை சரண்டர் செய்து தராமலும், ISI தரச்சான்று ரத்து செய்து தராமலும் விற்பனை வரி மனு சொத்து விலாசத்தில் உள்ளதை சரண்டர் செய்து NOC பெற்றுத் தராமலும் இருந்து

வருவதில் எதிர்மனுதாரர் தாவாச் சொத்தில் எவ்வித தொழிலும் செய்ய முடியாமலும் இருந்து வருகிறார். இதனால் நாளது வரை வாடகை நட்டம் மற்றும் இதர கட்டணங்களை மனுதாரர்கள் எதிர்மனுதாரருக்குச் செலுத்தியும், மின்சார வாரிய முதலான அரசுத்துறைகளுக்கு நிலுவையில் உள்ள தொகைகளை செலுத்தியும் ரசீது பெற்றுத் தந்த பிறகுதான் முன்தொகை முதலான கோரிக்கையை மனுதாரர்கள் முன்வைக்க அருகதை பெற்றவர்களாவார்கள். சமரச தீர்ப்பாணையின் படியும், சட்ட நடைமுறைப்படியும் மனுதாரர்கள் சிபிசி கட்டளை 21 விதி 37ன் படி இம்மனு தாக்கல் செய்ய எவ்வித சட்ட ஆதரவிலான அடிப்படையும் கிடையாது. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எதிருரையின் சுருக்கமாகும்.

3. இரு தரப்பும் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, இருதரப்பு வாதங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இரு தரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.19 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.18 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எழுத்துமூலமான வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவின் தீர்விற்காக இன்று (19.11.2025) இந்நீதிமன்றத்தால் நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. வழக்காவணங்களைப் பரிசீலிக்கும்போது மனுதாரர்கள் தரப்பில் கடந்த 04.01.2020 மற்றும் 08.01.2020 ஆகிய தேதிகளில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னிட்டு கடந்த

11.01.2023 அன்று மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.11 முதல் ம.சா.ஆ.19 என்று குறியீடு செய்வதற்கு பதிலாக தவறுதலாக ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.9 என்று குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே கடந்த 11.01.2023 தேதியில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.9 என்று குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்களை முறையே ம.சா.ஆ.11 முதல் ம.சா.ஆ.19 ஆவணங்களாக பாவித்துக்கொள்ள இந்நீதிமன்ற அலுவலக உத்தரவு எண். 11/2025 ன் படி உத்தரவிடப்பட்டுள்ளது.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனுவில் கோரியுள்ள பரிகாரங்கள் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? இல்லையா? என்பதாகும்.

**<u>6. தீர்வு:-</u>**

மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள்/வாதிகளால் அ.வ.எண்.34/2014 என்ற வழக்கானது எதிர்மனுதாரர்/பிரதிவாதி மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கில் உபய தரப்பினர்களுக்கிடையே பைசல் ஏற்பட்டு கடந்த 01.03.2014 அன்று சமரச இறுதிநிலை தீர்ப்பாணை இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் எனவே சமரச தீர்ப்பாணை 5 மற்றும் 6 வது காலங்களில் விவரிக்கப்பட்டுள்ள தொகை ரூ.7,50,000/- வாதிகளுக்கு பிரதிவாதியால் கிடைக்கும் பொருட்டு பிரதிவாதி தொகை செலுத்த தவறும் பட்சம் பிரதிவாதியை வாரண்டில் பிடித்து சிவில் ஜெயிலில் வைத்து தொகை வசூல் செய்து கொடுக்க உத்தரவிட வேண்டும்படிக்கும் மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணையின் 10 வது கட்டளைப்படி சமரச தீர்ப்பாணை செட்யூல் 3 ல் கண்டுள்ள இயந்திரங்களை அகற்றி மனு சொத்துக்களை சுவாதீனம் செய்து கொடுக்க உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டு மேற்படி சங்கதிகள் எதிர்மனுதாரர் தரப்பில் மறுக்கப்பட்டுள்ளது.

7. வழக்காவணங்களைப் பரிசீலிக்கும்போது அ.வ.எண்.34/2014 என்ற வழக்கானது எதிர்மனுதாரர்/பிரதிவாதி மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கில் உபய தரப்பினர்களுக்கிடையே பைசல் ஏற்பட்டு கடந்த 01.03.2014 அன்று சமரச தீர்ப்பாணை இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. பின்னிட்டு இம்மனுவானது மனுதாரர்கள்/வாதிகளால் சமரச தீர்ப்பாணை 5 மற்றும் 6 வது காலங்களில் விவரிக்கப்பட்டுள்ள தொகை ரூ.7,50,000/- வாதிகளுக்கு பிரதிவாதியால் கிடைக்கும் பொருட்டு நோட்டீஸ் அனுப்பி பிரதிவாதி தொகை செலுத்த தவறும் பட்சம் பிரதிவாதியை வாரண்டில் பிடித்து சிவில் ஜெயிலில் வைத்து தொகை வசூல் செய்து கொடுக்க உத்தரவிட வேண்டும்படிக்கும் மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணையின் 10 வது கட்டளைப்படி சமரச தீர்ப்பாணை செட்யூல் 3 ல் கண்டுள்ள இயந்திரங்களை அகற்றி எடுத்துக் கொள்ள மனுதாரர்கள்/வாதிகளுக்கு மனு சொத்துக்களை சுவாதீனம் செய்து கொடுக்க உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது மனுதாரர்கள்/வாதிகளால் எதிர்மனுதாரர்/பிரதிவாதி மீது அ.வ.எண்.34/2014 என்ற வழக்கானது இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அதில் கடந்த 01.03.2014 ம் தேதியில் உபய தரப்பினர்களுக்கிடையே சமரசம் ஏற்பட்டதன் அடிப்படையில் சமரச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது உபயதரப்பினர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாக உள்ளது. மேற்படி அ.வ.எண்.34/2014 வழக்கின் சமரச தீர்ப்பாணையின் 4 மற்றும் 5 ம் ஷரத்துக்களில் எதிர்மனுதாரர் மனுதாரர்களிடமிருந்து ஏற்கனவே பெற்றுள்ள முன்தொகை ரூ.20,00,000/-க்கு மேற்படி மனு செட்யூல் 3 ல் கண்டுள்ள இவ்வழக்கின் மனு சொத்துக்களான இயந்திரங்களை மனுதாரர்களுக்கு விற்றுள்ளார் என்றும் எனவே

ரூ.20,00,000/-யும் மேற்படி மனு செட்யூல் 3ல் கண்டுள்ள இயந்திரங்களுக்காக மனுதாரர்கள் சரி செய்து கொண்டுள்ளார்கள் என்றும் மேற்படி செட்யூல் 3ல் கண்டுள்ள இயந்திரங்களுக்கு மனுதாரர்கள் முழு உரிமையாளர்கள் என்றும் செட்யூல் 3ல் கண்டுள்ள இயந்திரங்களை பொறுத்து பிரதிவாதிக்கு 29.01.2014 முதல் எந்த ஒரு பாத்தியமும் உரிமையும் இல்லை என உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் வாடகை கால முடிவில் மனுதாரர்கள் தங்களது மனு செட்யூல் 3ல் கண்டுள்ள இயந்திரங்களை அகற்றி எடுத்துக் கொண்ட பிறகு எதிர்மனுதாரர் தான் பெற்றுக்கொண்டுள்ள முன் தொகை ரூ.7,50,000/-யும் தனது செட்யூல் 2ல் கண்டுள்ள இயந்திரங்களில் பழுது ஏதேனும் இருந்தால் அதற்கான பழுது நீக்கும் செலவினங்களை கழித்துக் கொண்டு மனுதாரர்களிடம் வட்டியின்றி கொடுத்துவிட வேண்டியது என்றும் மனுதாரர்கள் கடைசி மாதம் வரை வாடகையை கொடுத்துவிட வேண்டும் என்றும் எந்தவொரு மாதத்துக்கும் பிரதிவாதியிடம் உள்ள முன்தொகை ரூ.7,50,000/-ஐ மனுதாரர்கள் சரி செய்து கொள்ளுதல் கூடாது என்றும் செட்யூல் 2ல் கண்டுள்ள இயந்திரங்களின் செயல்பாட்டு திறனையும் பழுதுகளையும் மனுதாரர்களும் எதிர்மனுதாரரும் தங்களுக்கு பொதுவான வல்லுநர்களை வைத்து சரிபார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

9. மேற்படி சமரச தீர்ப்பாணையின் 4, 5 ஷரத்துக்களின் பரிசீலனையில் இருந்து இவ்வழக்கின் மனு சொத்துக்களான இயந்திரங்களை எதிர்மனுதாரர் மனுதாரர்கள் எதிர்மனுதாரருக்கு கொடுத்த முன்தொகை ரூ.20,00,000/-க்காக விற்றுவிட்டார் என்பதும் மனு சொத்துக்களான இயந்திரங்களுக்கு 29.01.2014 முதல் மனுதாரர்கள் தான் முழு உரிமையார்கள் என்பதும் மனு சொத்துக்களைப் பொறுத்து எதிர்மனுதாரருக்கு எந்த பாத்தியமும் உரிமையும்

இல்லை என்பதும் ஊர்ஜிதமாகிறது. மேற்படி சமரச தீர்ப்பாணையில் 6 வது ஷரத்தில் வாடகைக்கால முடிவில் தற்போதைய முன்தொகை ரூ.7,50,000/– தவிர எதிர்மனுதாரர் வேறு எந்தத் தொகையும் மனுதாரர்களுக்கு கொடுக்க வேண்டியதில்லை என்றும் வாடகைக்கு விடப்பட்டுள்ள கட்டிடங்கள் மற்றும் ஷெட்யூல் 2 ல் கண்டுள்ள இயந்திரங்கள் சம்மந்தமான அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகள், மின்கட்டணம் மற்றும் அதற்குண்டான டெபாசிட் மற்றும் வேறு இதர கட்டணங்கள் எவையும் மனுதாரர்களே செலுத்திக் கொள்ள வேண்டும் என்றும் மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திடமிருந்து பெற வேண்டிய சான்றுகளை மனுதாரர்களே பெற்றுக்கொண்டு மாசுக்கட்டுப்பாட்டு விதிகளுக்குட்பட்டு அனுபவித்துக் கொள்ள வேண்டியது என்றும் தாவா கட்டிடத்தில் உள்ள மின் இணைப்பு எண். 04.076.006.61 என்ற மின் இணைப்பை மனுதாரர்கள் பயன்படுத்திக் கொண்டு மின் கட்டணத்தை கட்டிக்கொள்ள வேண்டியது என்றும் கூடுதல் மின் திறன் தேவையெனில் அதை வாதிகளின் செலவில் பெற்றுக் கொள்ளவேண்டுமென சொல்லப்பட்டுள்ளது.

10. மேற்படி சமரச தீர்ப்பாணையின் 9 வது ஷரத்தில் மூன்று மாத வாடகை நிலுவையாகும் பட்சம் எதிர்மனுதாரர் அறிவிப்பு மூலம் கேட்டு அறிவிப்பு கிடைக்கப்பெற்ற 7 நாட்களுக்குள் மனுதாரர்கள் எதிர்மனுதாரருக்கு வாடகை நிலுவையை செலுத்தாமல் போனால் வாடகை சொத்தை தன்னிச்சையாக சுவாதீனம் செய்து கொள்ள எதிர்மனுதாரருக்கு உரிமையுண்டு என உபயவாதிகள் ஒப்புக்கொள்கிறார்கள் என்றும் கெடுவுக்கு முன்பு 3 மாத கால அறிவிப்பின் போல் இரு தரப்பாலும் வாடகையை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது.

11. மேற்படி சமரச தீர்ப்பாணையின் 10வது ஷரத்தில் மனு சொத்துக்கள் எதிர்மனுதாரரோ அவரால் நியமிக்கப்படும் ஏஜெண்டோ சென்று அவ்வப்போது ஆய்வு செய்ய உரிமையுண்டு என்றும் இரண்டு வருட முடிவில் செட்யூல் 3ல் கண்டுள்ள இயந்திரங்களை அகற்றி எடுத்துக்கொள்ள மனுதாரர்களுக்கு எல்லா உரிமையும் உண்டு என்றும் அதேபோல 2 வருட முடிவில் தாவா சொத்திலிருந்து காலி செய்து வெளியேற்றி சொத்தின் சுவாதீனத்தை எதிர்மனுதாரரிடம் ஒப்படைக்க மனுதாரர்கள் உறுதியளிக்க வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது. மேற்படி சமரச தீர்ப்பாணை 10வது ஷரத்தின் பரிசீலனையில் இருந்து 2 வருட முடிவில் செட்யூல் 3ல் கண்டுள்ள இம்மனுவில் கண்டுள்ள தாவா சொத்துக்களான இயந்திரங்களை அகற்றி எடுத்துக்கொள்ள மனுதாரர்களுக்கு எல்லா உரிமையும் உண்டு என்பது தெளிவாகிறது.

12. மேற்படி சமரச தீர்ப்பாணையின் பரிசீலனையில் இருந்து மனு சொத்துக்களான இயந்திரங்களின் முழு உரிமையாளர்கள் மனுதாரர்கள் என்பதும் மூன்று மாத வாடகை நிலுவையாகும் பட்சம் எதிர்மனுதாரர் அறிவிப்பு மூலம் கேட்டு அறிவிப்பு கிடைக்கப்பெற்ற 7 நாட்களுக்குள் மனுதாரர்கள் எதிர்மனுதாரருக்கு வாடகை நிலுவையை செலுத்தாமல் போனால் வாடகை சொத்தை தன்னிச்சையாக சுவாதீனம் செய்து கொள்ள எதிர்மனுதாரருக்கு உரிமையுண்டு என்பதும் தெரிய வருகிறது. மேற்படி சமரச தீர்ப்பாணையில் மனுதாரர்கள் வாடகை தொகையை செலுத்தாத பட்சத்தில் வாடகை சொத்தை சுவாதீனம் செய்துகொள்ள எதிர்மனுதாரருக்கு உரிமை உள்ளது என்று கண்டுள்ளதே தவிர அதற்கு ஈடாக மனு சொத்துக்களான இயந்திரங்களை தன் வசம் வைத்துக்கொள்ளவோ அந்த நிலுவை தொகைகளை முன்தொகையான

ரூ.7,50,000/−ல் இருந்து கழித்துக்கொள்ளவோ எதிர்மனுதாரருக்கு உரிமை உள்ளதாக எதுவும் சொல்லப்படவில்லை.

13. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.1 ஆவணமாக எதிர்மனுதாரரால் மனுதாரர்களுக்கு கொடுத்த 06.03.2015 தேதியிட்ட அறிவிப்பை பரிசீலிக்கும்போது அறிவிப்பு கிடைக்கப்பெற்ற 7 தினங்களுக்குள் வாடகை பாக்கி ரூ.3,00,000/− மற்றும் மின் கட்டணம் ரூ.16,954/− ஆகியவற்றை செலுத்த வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.2 ஆவணமாக எதிர்மனுதாரரால் 1ம் மனுதாரருக்கு கொடுக்கப்பட்ட ரசீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ரசீதை பரிசீலிக்கும்போது அதில் 29.11.2014 முதல் 28.02.2015 வரை 3 மாத கால வாடகை ரூ.3,00,000/− மற்றும் மின் கட்டணம் ரூ.16,954/− ஆகியவைகளை எதிர்மனுதாரர் பெற்றுக்கொண்டுள்ளார் என்பது தெரிய வருகிறது.

14. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.3 ஆவணமாகவும் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.1 ஆவணமாகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ள 27.06.2015 தேதியிட்ட பிரதிவாதி வாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பரிசீலிக்கும்போது அறிவிப்பு கிடைக்கப்பெற்ற 7 தினங்களுக்குள் வாடகை பாக்கி ரூ.3,00,000/− மற்றும் மின் கட்டணம் ரூ.22,715/− ஆகியவற்றை செலுத்த வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.4 ஆவணமாகவும் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.5 ஆவணமாகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ள 07.07.2015 தேதியிட்ட மனுதாரர்களின் பதில் அறிவிப்பை பரிசீலிக்கும்போது ஒரு மாத வாடகை ரூ.1,00,000/−ஐ 30.06.2015 தேதியில் NEFT மூலமாக எதிர்மனுதாரரின் கனரா வங்கி கிளைக்கு

செலுத்தப்பட்டுள்ளதாகவும் மீத இரண்டு மாத வாடகை 15 தினங்களுக்குள் செலுத்தப்படுவதாகவும் 07.07.2015 தேதியிட்ட அறிவிப்பானது குத்தகை முறிவு அறிவிப்பாக கருதவும் என்று குறிப்பிட்டு மேற்படி அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.5 ஆவணமாகவும் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.6 ஆவணமாகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ள 28.07.2015 தேதியிட்ட எதிர்மனுதாரரால் மனுதாரர்களுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பரிசீலிக்கும்போது அறிவிப்பை பரிசீலிக்கும்போது SILO Machinery – Vertical Cement Products என்ற கம்பெனிக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்தி ரசீதுடன் வந்து இயந்திரங்களை எடுத்துக்கொள்ள வேண்டியது என்று மேற்படி அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது.

15. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.6 ஆவணமாகவும் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.9 ஆவணமாகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ள 04.08.2015 தேதியிட்ட மனுதாரர்களால் எதிர்மனுதாரருக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பை பரிசீலிக்கும்போது வாடகை தொகையான ரூ.3,00,000/– வாதிகளால் செலுத்தப்பட்டுவிட்டதாகவும் மின் கட்டணமான ரூ.22,721/– மற்றும் 3 மாத வாடகையான ரூ.3,00,000/– வாதிகளால் பிரதிவாதியின் வங்கி கணக்கிற்கு செலுத்தப்பட்டுவிட்டதாகவும் வாதிகள் பிரதிவாதிக்கு கொடுத்த அட்வான்ஸ் தொகையான ரூ.20,00,000/– இயந்திரங்களுக்கான தொகையாக கழித்துக் கொள்ளப்பட்டு இயந்திரங்கள் வாதிகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றும் வாதிகள் M/s. Ess Jay Kay Industries நிறுவனத்திற்கு எவ்வித தொகையும் செலுத்த கடமைப்பட்டவர்கள் அல்ல என்றும் அதைப் பொறுத்து சமரச தீர்ப்பாணையில் குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை என்றும் சொல்லப்பட்டு மேற்படி அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது.

16. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.7 மற்றும் ம.சா.ஆ.8 ஆவணங்களாக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆர்யா சிமெண்ட்ஸ் நிறுவனத்திற்கு மேட்டூர் அணை கண்காணிப்பு பொறியாளர் அனுப்பிய கடிதத்தை பரிசீலிக்கும்போது HT.SC.No.266 & S.C.No.268 க்கு ரூ.16,17,923/- தொகையை 10 தினங்களுக்குள் செலுத்தக்கோரி மேற்படி அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.9 ஆவணமான 06.10.2017 தேதியிட்ட ஆர்யா சிமெண்ட்ஸ் நிறுவனத்தால் அனுப்பப்பட்ட அறிவிப்பு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.10 மற்றும் ம.சா.ஆ.16 ஆவணங்களாக தாக்கல் செய்யப்பட்டுள்ள 07.01.2020 தேதியிட்ட நிலுவையின்மை சான்றிதழை பரிசீலிக்கும்போது ஆர்யா சிமெண்ட்ஸ் நிறுவனத்தால் மேற்படி Ess Jay Kay Industries க்கு முழு தொகையும் செலுத்தப்பட்டுவிட்டதால் எவ்வித தொகையும் நிலுவையில் இல்லை என்று குறிப்பிட்டு மேற்படி சான்று வழங்கப்பட்டுள்ளது .

17. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.11 ஆவணமாக 13.10.2017 தேதியிட்ட மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் Crl.O.P.No.21952/2017 க்கான உத்தரவு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ம.சா.ஆ.11 உத்தரவை பரிசீலிக்கும்போது ஒரு வேணுகோபால் என்பவர் தாக்கல் செய்த Crl.O.P.No.21952/2017 உத்தரவில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மனுதாரர் 09.09.2017 ல் கொடுத்த புகார் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கும்படியும் உத்தரவிடப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது

18. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.12 ஆவணமாக 18.11.2017 தேதியிட்ட காங்கயம் காவல் ஆய்வாளர் அவர்களால் அனுப்பப்பட்ட அழைப்பாணையை பரிசீலிக்கும்போது வேணுகோபால் என்பவரால் இம்மனுவின் எதிர்மனுதாரர் A.G.நடராஜன் மீது திருப்பூர், காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் புகார்

கொடுக்கப்பட்டுள்ளது என்றும் சென்னை உயர்நீதிமன்றத்தில் Crl.O.P.No.21952/2017 ன்படி வேணுகோபால் என்பவரையும், A.G.நடராஜன் என்பவரையும் நேரில் விசாரணை செய்ய வேண்டியுள்ளதால் காவல் ஆய்வாளர் அலுவலகத்தில் குவிமுச 160(1) பிரிவின்படி 20.11.2017 ம் தேதி காலை 11.00 மணிக்கு ஆஜராகுமாறு மேற்படி அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

19. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.13 ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள 22.09.2021 தேதியிட்ட தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், பொது தகவல் அலுவலர்/ மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களால் 1 ம் மனுதாரருக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பை பரிசீலிக்கும்போது AGN Cement Industry என்ற தொழிற்சாலைக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், திருப்பூர் வடக்கு அலுவலகத்திலிருந்து இசைவாணை எதுவும் வழங்கப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.14 ஆவணமாக 23.09.2021 தேதியிட்ட இந்திய தர நிர்ணய அமைவனம் கொடுத்த அறிவிப்பு மற்றும் ம.சா.ஆ.15 ஆவணமாக 23.10.2017 தேதியிட்ட ஆர்யா சிமெண்ட்ஸ் நிறுவனத்திற்கு மேட்டூர் அணை கண்காணிப்பு பொறியாளர் அவர்களால் அனுப்பப்பட்ட கடிதம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

20. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.17 மற்றும் ம.சா.ஆ.18 ஆவணங்களாக சிட்டி யூனியன் வங்கியின் வங்கி கணக்கு பட்டியல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.19 ஆவணமாக 23.09.2022 தேதியிட்ட இந்திய அரசு தொழில்துறை அமைச்சகம் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கொடுத்த தகவல்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எ.ம.சா.ஆ.10 ஆவணமான 20.04.2015 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பை பரிசீலிக்கும்போது மேற்படி நிறுவனத்திற்கு

ரூ.11,80,928/- நிலுவைத்தொகை செலுத்த வேண்டும் என்றும் மேற்படி தொகையை 24% வட்டியுடன் மேற்படி அறிவிப்பு கிடைத்த 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்று கண்டு மேற்படி அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

21. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எ.ம.சா.ஆ.11 ஆவணமாக 22.07.2015 தேதியிட்ட அறிவிப்பை பரிசீலிக்கும்போது Ess Jay Kay Industries நிறுவனத்திற்கு ரூ.11,80,928/- நிலுவைத்தொகை செலுத்த வேண்டும் என்றும் மேற்படி தொகையை 24% வட்டியுடன் மேற்படி அறிவிப்பு கிடைத்த 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்று கண்டு மேற்படி அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. எ.ம.சா.ஆ.12 ஆவணமான 02.02.2016 தேதியிட்ட அறிவிப்பை பரிசீலிக்கும்போது Ess Jay Kay Industries நிறுவனம் 17.04.2015 மற்றும் 22.07.2015 தேதிகளில் வழக்கறிஞர் அறிவிப்பு வழங்கியதற்கு பின்னிட்டு இந்த வழக்கின் 1ம் மனுதாரர் பேச்சிமுத்து என்பவர் முழு நிலுவை தொகையையும் செலுத்திவிட்டார் என்று கண்டு மேற்படி அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது.

22. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எ.ம.சா.ஆ.13 ஆவணமாக உதவி மின்பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் லிட், காங்கயம் அவர்கள் ஆர்யா சிமெண்ட்ஸ்க்கு அனுப்பிய அறிவிப்பை பரிசீலிக்கும்போது மின் இணைப்பு எண்.076-006-61 என்ற மின் இணைப்பிற்கு மின் கட்டணம் ரூ.15,22,387/- செலுத்தாமல் நிலுவையில் உள்ளது என்று மேற்படி அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.14 ஆவணமாக 28.09.2016 தேதியிட்ட எதிர்மனுதாரர் தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலர்களுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பும், எ.ம.சா.ஆ.15 ஆவணமாக

அஞ்சல் ஒப்புகை அட்டைகளும், எ.ம.சா.ஆ.16 மற்றும் எ.ம.சா.ஆ.18 ஆவணங்களாக மின் கட்டண ரசீதுகளும், எ.ம.சா.ஆ.17 ஆவணமாக AGN Agro Products நிறுவனத்தின் வங்கி கணக்கு விபர பட்டியலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

23. மேற்படி உபய தரப்பினர்களின் ஆவணங்களின் பரிசீலனையில் இருந்து மனுதாரர்களின் 07.07.2015 தேதியிட்ட ம.சா.ஆ.4 அறிவிப்பின் அடிப்படையில் உபயவாதிகளுக்கு இடையிலான வாடகை ஒப்பந்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு முடித்துக்கொள்ளப்பட்டுள்ளது என்பது உபய தரப்பினர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாக உள்ளது. வழக்காவணங்களின் பரிசீலனையில் இருந்து SJK Industries நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகையை மனுதாரர்கள் செலுத்திவிட்டார்கள் என்பதும் மேட்டுர் அனல் மின் நிலையத்திற்கு மனுதாரர்கள் செலுத்த வேண்டிய நிலுவைத்தொகையையும் எதிர்மனுதாரருக்கு கொடுக்க வேண்டிய வாடகை தொகை மற்றும் மின் கட்டண பாக்கிகள் ஆகியவற்றையும் மனுதாரர்கள் செலுத்தியுள்ளார்கள் என்பது தெரிய வருகிறது.

24. அ.வ.எண்.34/2014 வழக்கின் சமரச தீர்ப்பாணையை பரிசீலிக்கும்போது எதிர்மனுதாரருக்கு மனுதாரர்கள் நிலுவைத்தொகைகள் ஏதேனும் செலுத்த வேண்டியிருக்கும் பட்சத்தில் மேற்படி தொகைகளை மனுதாரர்கள் செலுத்தும் வரை தாவா சொத்துக்களான இயந்திரங்களை பிரதிவாதி தன் வசம் வைத்துக்கொள்ளலாம் என்று குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை. மேற்படி சமரச தீர்ப்பாணையில் ஷரத்து 4, 5 மற்றும் 10 ஆகியவற்றின் அடிப்படையில் தாவா சொத்தில் கண்டுள்ள இயந்திரங்களுக்கு மனுதாரர்கள் தான் முழு உரிமையாளர்கள் என்றும் 29.01.2014 முதல் தாவா

சொத்துக்களைப் பொறுத்து எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாத்தியமும் உரிமையும் இல்லை என்றும் 2 வருட முடிவில் தாவா சொத்துக்களான இயந்திரங்களை அகற்றி எடுத்துக்கொள்ள மனுதாரர்களுக்கு எல்லா உரிமையும் உண்டு என்றும் சொல்லப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரர்கள் பாக்கிகள் அனைத்தையும் நேர் செய்தபிறகு தான் எவ்வித பரிகாரமும் கேட்க முடியும் என்று எதிர்மனுதாரர் தரப்பில் முன்வைக்கப்பட்ட சங்கதிகள் இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாக இல்லை.

25. மேலும் அ.வ.எண்.34/2014 வழக்கின் சமரச தீர்ப்பாணையின் அடிப்படையில் மனுதாரர்கள் எதிர்மனுதாரருக்கு எதிருரையில் சொல்லியுள்ளபடி ஏதேனும் நிலுவைத்தொகை செலுத்த வேண்டியது இருந்தால் அதைப் பொறுத்து எதிர்மனுதாரர் தனியாக வழக்கிட்டு அது சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர மேற்படி சமரச தீர்ப்பாணையின் அடிப்படையில் மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரரால் விற்பனை செய்யப்பட்டுவிட்ட மனு சொத்துக்களான இயந்திரங்களை மனுதாரர்கள் பயன்படுத்துவதையும் கழற்றி எடுத்துக் கொள்வதையும் தடை செய்ய எதிர்மனுதாரருக்கு எவ்வித உரிமையும் இல்லை.

26. மேலும் மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவில் 8 மற்றும் 9 காலங்களில் மற்றும் சமரச தீர்ப்பாணையில் 5 மற்றும் 6 காலங்களில் கண்டுள்ள தொகை ரூ.7,50,000/-ஐ மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரரால் கிடைக்கும் பொருட்டு எதிர்மனுதாரருக்கு நோட்டீஸ் அனுப்பி எதிர்மனுதாரர் தொகை செலுத்த தவறும் பட்சத்தில் எதிர்மனுதாரரை வாரண்டில் பிடித்து சிவில் ஜெயிலில் வைத்து தொகை வசூல் செய்து கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரருக்கு மனுதாரர்கள் செலுத்த வேண்டிய

நிலுவைத்தொகையை செலுத்தாததாலும் எதிர்மனுதாரரின் இயந்திரங்களை பழுதுநீக்க ஆகும் செலவை Estimate செய்து எதிர்மனுதாரருக்கு செலுத்த முயற்சிக்காமலும் நாளது வரை வாடகை பாக்கியும், மின் கட்டணமும் செலுத்தாமல் இருந்து வருவதாலும் மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தில் சரண்டர் செய்யாமலும் விற்பனை வரி மனு சொத்து விலாசத்தில் உள்ளதை சரண்டர் செய்து Noc பெற்றுத்தராமலும் மனுதாரர்கள் இருந்து வந்து எதிர்மனுதாரருக்கு பெருத்த கஷ்டங்கள் ஏற்படுத்திவிட்டு அட்வான்ஸ் தொகை கேட்டு இம்மனு தாக்கல் செய்ய மனுதாரர்களுக்கு எவ்வித அருகதையும் கிடையாது என்றும் சொல்லப்பட்டுள்ளது.

27. அ.வ.எண்.34/2014 வழக்கின் சமரச தீர்ப்பாணையை பரிசீலிக்கும்போது அதில் 2வது ஷரத்தில் எதிர்மனுதாரர் மனுதாரர்களிடம் நீதிமன்றத்திற்கு வெளியே ரூ.7,50,000/- முன்தொகையாக பெற்றுக்கொள்ள வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது. மனுதாரர்கள் முன்தொகையாக எதிர்மனுதாரருக்கு ரூ.7,50,000/-செலுத்தியுள்ளார் என்பது உபய தரப்பினர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாக உள்ளது. மேலும் மேற்படி சமரச தீர்ப்பாணையில் 5வது ஷரத்தில் வாடகை கால முடிவில் மனுதாரர்கள் தங்களது செட்யூல் 3ல் கண்டுள்ள இயந்திரங்களை அகற்றி எடுத்துக்கொண்ட பிறகு எதிர்மனுதாரர் தான் பெற்றுக்கொண்டுள்ள முன்தொகை ரூ.7,50,000/-ம் தனது செட்யூல் 3ல் கண்டுள்ள இயந்திரங்களில் பழுது ஏதேனும் இருந்தால் அதற்கான பழுது நீக்கும் செலவினங்களை கழித்துக்கொண்டு மனுதாரர்களிடம் வட்டியின்றி கொடுத்துவிட வேண்டியது என்றும் மனுதாரர்கள் கடைசி மாதம் வரை வாடகையை கொடுத்துவிட வேண்டும் என்றும் எந்த ஒரு மாதத்துக்கும் எதிர்மனுதாரரிடம் உள்ள முன்தொகை ரூ.7,50,000/-ஐ சரி செய்து கொள்ளுதல்

கூடாது என்றும் செட்யூல் 2ல் கண்டுள்ள இயந்திரங்களின் செயல்பாட்டு திறனையும் பழுதுகளையும் மனுதாரர்களுக்கும் எதிர்மனுதாரரும் தங்களுக்கு பொதுவான வல்லுநர்களை வைத்து சரிபார்த்துக்கொள்ள வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது.

28. மேற்படி சமரச தீர்ப்பாணை ஷரத்து 5ன் பரிசீலனையில் இருந்து மனுதாரர்கள் சமரச தீர்ப்பாணை செட்யூல் 3ல் கண்டுள்ள இம்மனு சொத்துக்களான இயந்திரங்களை அகற்றி எடுத்துக்கொண்டதற்கு பின்னிட்டு எதிர்மனுதாரர் தான் மனுதாரர்களிடமிருந்து பெற்றுக்கொண்டுள்ள முன்தொகை ரூ.7,50,000/–ம் செட்யூல் 2ல் கண்டுள்ள இயந்திரங்களில் பழுது ஏதேனும் இருந்தால் அதற்கான பழுது நீக்கும் செலவினங்களை கழித்துக்கொண்டு மனுதாரர்களிடம் வட்டியின்றி கொடுத்துவிட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்பது ஊர்ஜிதமாகிறது.

29. இம்மனுவில் மனுதாரர்களால் சமரச தீர்ப்பாணையில் செட்யூல் 3ல் கண்டுள்ள மனு சொத்துக்களான இயந்திரங்களை அமீனா மூலம் சுவாதீனம் செய்துதரக் கோரி இந்நிறைவேற்று மனுவில் பரிகாரங்கள் கோரப்பட்டுள்ளது. மேலும் மேற்படி சமரச தீர்ப்பாணையின் அடிப்படையில் மனுதாரர்கள் செட்யூல் 3ல் கண்டுள்ள தாவா சொத்துக்கான இயந்திரங்களை அகற்றிக் கொண்டதற்கு பின்னிட்டுதான் எதிர்மனுதாரர் தான் மனுதாரர்களிடமிருந்து பெற்றுக்கொண்டுள்ள முன்தொகையான ரூ.7,50,000/–ல் இருந்து எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சமரச தீர்ப்பாணை செட்யூல் 2ல் கண்டுள்ள இயந்திரங்களுக்கு பழுது நீக்கும் செலவினங்களை கழித்துகொண்டு மீதத்தொகையை மனுதாரர்களிடம் வட்டியின்றி செலுத்திவிட வேண்டியது என்று சமரச தீர்ப்பாணையில் சொல்லப்பட்டுள்ளது.

30. மேற்படி சமரச தீர்ப்பாணையின் பரிசீலனையில் இருந்து அதில் செட்யூல் 2ல் கண்டுள்ள இயந்திரங்களுக்கு பழுது நீக்கும் செலவினங்களை மட்டுமே மனுதாரர்களின் முன்தொகையான ரூ.7,50,000/- தொகையில் இருந்து எதிர்மனுதாரர் கழித்துக்கொண்டு வட்டியுடன் மனுதாரர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று மட்டுமே சொல்லப்பட்டுள்ளதே தவிர எதிர்மனுதாரர் தரப்பில் சொல்வதுபோல் எதிர்மனுதாரருக்கு மனுதாரர்கள் கொடுக்க வேண்டிய நிலுவைத்தொகைகள் ஏதேனும் இருக்கும் பட்சத்தில் முன்தொகையான ரூ.7,50,000/- தொகையில் இருந்து கழித்துக்கொள்ளலாம் என்றோ மனுதாரர்கள் மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தில் சான்றை சரண்டர் செய்து தராமலும் ஐஎஸ்ஐ சான்று ரத்து செய்து தராமலும் விற்பனை வரி மனு சொத்து விலாசத்தில் உள்ளதை சரண்டர் செய்து NOC பெற்றுத்தராமலும் மனுதாரர்கள் இருந்து வரும் பட்சத்தில் மேற்படி முன்தொகையான ரூ.7,50,000/-ஐ எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு கொடுக்காமல் எதிர்மனுதாரர் தன் வசமே வைத்துக்கொள்ளலாம் என்றும் குறிப்பிட்டு சொல்லப்படாத நிலையில் மனுதாரர்கள் பாக்கிகள் அனைத்தையும் ஒப்புக்கொண்டபடி நேர் செய்த பிறகு தான் மனு பரிகாரங்களைப் பொறுத்து கேட்க முடியும் என்று எதிர்மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் ஏற்கும்படியாக இல்லை.

31. நீ.ம.சா.ஆ.1 ஆன நீதிமன்ற ஆணையர் அறிக்கையை பரிசீலிக்கும்போது அதில் சமரச தீர்ப்பாணையில் செட்யூல் 2ல் கண்டுள்ள இயந்திரங்களை பழுது நீக்க ரூ.1,65,200/- செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கையானது 18.06.2018 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தற்போது மேற்படி இயந்திரங்களின் நிலை மற்றும் அவற்றின் பழுது நீக்க ஆகும் செலவைப் பொறுத்து உபயதரப்பினர்களால் ஆவணங்கள் எதுவும் முன்னிடப்படவில்லை. நீ.ம.சா.ஆ.1

ஆன நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் சமரச தீர்ப்பாணையில் கண்டுள்ள செட்யூல் 2ல் கண்டுள்ள இயந்திரங்களை பழுது நீக்க ஆகும் செலவை பொறுத்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் எதுவும் முன்னிடப்படவில்லை. எனவே நீ.ம.சா.ஆ.1 நீதிமன்ற ஆணையர் அறிக்கையின் பரிசீலனையில் இருந்து எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சமரச தீர்ப்பாணையில் செட்யூல் 2 ல் கண்டுள்ள இயந்திரங்களை பழுது நீக்க ரூ.1,65,200/– செலவாகும் என்பது தெளிவாகிறது.

32. மேலும் வழக்காவணங்களின் பரிசீலனையில் இருந்து இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.34/2014 வழக்கானது மனுதாரர்கள்/ வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டு உபய தரப்பினர்களுக்கிடையே சமரசம் ஏற்பட்டு சமரச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு மேற்படி சமரச தீர்ப்பாணை தற்போது வரை மாற்றியமைக்கப்படாமல் செயல்படுத்தத்தக்க தீர்ப்பாணையாக உள்ளது. மேற்படி தீர்ப்பாணையின் நிறைவேற்றம் தற்போது வரை தடை செய்யப்படவில்லை. ஆகையால் இந்நிறைவேற்று நீதிமன்றத்திற்கு மேற்படி தீர்ப்பாணையை நிறைவேற்றம் செய்ய நடவடிக்கை எடுப்பதை தவிர வேறு வழி இல்லை.

33. எனவே மேலேகண்ட பரிசீலனைகள் மற்றும் விவாதங்களின் அடிப்படையிலும், உபயதரப்பினர்களின் சான்றாவணங்களின் பரிசீலனையில் இருந்தும் அ.வ.எண்.34/2014 வழக்கில் கடந்த 01.03.2014 அன்று உபய தரப்பினர்களுக்கிடையே சமரசம் ஏற்பட்டு இ.ம.எண்.333/2014 மனுவில் ஏற்பட்ட சமரசத்தின் அடிப்படையில் இந்நீதிமன்றத்தால் சமரச இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையிலும் சமரச தீர்ப்பாணை செட்யூல் 3 ல் கண்டுள்ள இம்மனுவின் மனு சொத்துக்களான இயந்திரங்களை

மனுதாரர்கள்/வாதிகள் வசம் சுவாதீனம் ஒப்படைக்க உத்தரவிடுவதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து சமரச தீர்ப்பாணை செட்யூல் 3 ல் கண்டுள்ள இம்மனுவின் மனு சொத்துக்களான இயந்திரங்களை மனுதாரர்கள்/வாதிகள் வசம் சுவாதீனம் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.

34. மனுதாரர்கள் மேற்படி மனு சொத்துக்களான இயந்திரங்களை சுவாதீனம் பெற்றதற்கு பின்னிட்டு எதிர்மனுதாரர் மனுதாரர்களிடமிருந்து சமரச தீர்ப்பாணையின் அடிப்படையில் பெற்றுக்கொண்டுள்ள முன்தொகை ரூ.7,50,000/- தொகையில் சமரச தீர்ப்பாணையின் 2 வது செட்யூலில் கண்டுள்ள எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட இயந்திரங்களின் பழுது நீக்க நீ.ம.சா.ஆ.1 அறிக்கையின் அடிப்படையில் ஏற்படக்கூடிய செலவுத்தொகையான ரூ.1,65,200/- தொகையை கழித்துக்கொண்டு மீதத்தொகையை மனுதாரர்களிடம் எதிர்மனுதாரர் வட்டியின்றி ஒரு மாத கால அவகாசத்திற்குள் கொடுத்துவிட வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,**

இம்மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, மனு சொத்துக்களை மனுதாரர்கள்/வாதிகள் வசம் சுவாதீனம் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது. மனுதாரர்கள் மேற்படி மனு சொத்துக்களான இயந்திரங்களை சுவாதீனம் பெற்றதற்கு பின்னிட்டு எதிர்மனுதாரர் மனுதாரர்களிடமிருந்து சமரச தீர்ப்பாணையின் அடிப்படையில் பெற்றுக்கொண்டுள்ள முன்தொகை ரூ.7,50,000/- தொகையில் சமரச தீர்ப்பாணையின் 2 வது செட்யூலில் கண்டுள்ள எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட இயந்திரங்களின் பழுது நீக்க நீ.ம.சா.ஆ.1 அறிக்கையின் அடிப்படையில் ஏற்படக்கூடிய செலவுத்தொகையான ரூ.1,65,200/- தொகையை கழித்துக்கொண்டு மீதத்தொகையை

மனுதாரர்களிடம் எதிர்மனுதாரர் வட்டியின்றி ஒரு மாத கால அவகாசத்திற்குள் கொடுத்துவிட வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க வாய்தா 10.12.2025. படி மெமோ செலுத்த ஒரு வார கால அவகாசம் வழங்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.11.19 18:13:20 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்** :– இல்லை

**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** :–

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 06.03.2015 | தேதியிட்ட பிரதிவாதி அவரது வழக்கறிஞர் மூலமாக வாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல் |
| ம.சா.ஆ.2 | 11.03.2015 | தேதியீட்ட ரசீது நகல் |
| ம.சா.ஆ.3 | 27.06.2015 | தேதியிட்ட பிரதிவாதி அவரது வழக்கறிஞர் மூலமாக வாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல் |
| ம.சா.ஆ.4 | 07.07.2015 | தேதியிட்ட வாதி தரப்பில் கொடுக்கப்பட்ட பதில் அறிவிப்பு சார்பு நகல் |
| ம.சா.ஆ.5 | 28.07.2015 | தேதியிட்ட பிரதிவாதியின் வழக்கறிஞர் வாதியின் வழக்கறிஞருக்கு அனுப்பிய அறிவிப்பு |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.6 | 04.08.2015 | தேதியிட்ட வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய கூடுதல் பதில் அறிவிப்பு (Rejoinder) |
| ம.சா.ஆ.7 | 25.10.2016 | தேதியிட்ட வாதிகள் சிமெண்ட் நிறுவனத்திற்கு மேட்டூர் அணை கண்காணிப்பு பொறியாளர் அனுப்பிய கடிதம் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.8 | 10.08.2017 | தேதியிட்ட வாதிகள் சிமெண்ட் நிறுவனத்திற்கு மேட்டூர் அணை கண்காணிப்பு பொறியாளர் அனுப்பிய கடிதம் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.9 | 06.10.2017 | தேதியிட்ட ஆரியா சிமெண்ட் நிறுவனத்தால் கொடுக்கப்பட்ட அறிவிப்பு |
| ம.சா.ஆ.10 | 07.01.2020 | தேதியிட்ட நிலுவையின்மை சான்றிதழ் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.11 | 13.10.2017 | தேதியிட்ட மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் CRL. O.P. No.21952/2017 வழங்கிய உத்தரவு சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.12 | 18.11.2017 | தேதியிட்ட அழைப்பாணை நகல் |
| ம.சா.ஆ.13 | 22.09.2021 | தேதியிட்ட தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய கடிதம் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.14 | 23.09.2021 | தேதியிட்ட இந்திய தர நிர்ணய அமைவிடம் கொடுத்த கடிதம் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.15 | 23.10.2017 | தேதியிட்ட வாதிகள் சிமெண்ட் நிறுவனத்திற்கு மேட்டூர் அணை கண்காணிப்பு பொறியாளர் அனுப்பிய கடிதம் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.16 | 07.01.2020 | தேதியிட்ட நிலுவையின்மை சான்றிதழ் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.17 | – | வங்கி கணக்கு விவர பட்டியல் நகல் |
| ம.சா.ஆ.18 | – | வங்கி கணக்கு விவர பட்டியல் நகல் |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.19 | 23.09.2022 | தேதியிட்ட இந்திய அரசு தொழில்துறை அமைச்சகம் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கொடுத்த தகவல்கள் |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>** :- இல்லை

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>** :-

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 27.06.2015 | தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.2 | - | திருப்பப்பட்ட அஞ்சல் உறை |
| எ.ம.சா.ஆ.3 | - | திருப்பப்பட்ட அஞ்சல் உறை |
| எ.ம.சா.ஆ.4 | - | அஞ்சல் ஒப்புதல் அட்டை |
| எ.ம.சா.ஆ.5 | 07.07.2015 | தேதியிட்ட வாதி தரப்பில் கொடுக்கப்பட்ட பதில் அறிவிப்பு சார்பு நகல் |
| எ.ம.சா.ஆ.6 | 28.07.2015 | தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.7 | - | அஞ்சல் ஒப்புகை அட்டைகள் (3 எண்ணிக்கை) |
| எ.ம.சா.ஆ.8 | - | திருப்பப்பட்ட அஞ்சல் உறை |
| எ.ம.சா.ஆ.9 | 04.08.2015 | தேதியிட்ட வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய கூடுதல் பதில் அறிவிப்பு (Rejoinder) |
| எ.ம.சா.ஆ.10 | 20.04.2015 | தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.11 | 22.07.2015 | தேதியிட்ட அறிவிப்பு சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.12 | 02.02.2016 | தேதியிட்ட அறிவிப்பு சான்றிட்ட நகல் |

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.13 | 26.09.2016 | தேதியிட்ட மின்சார வாரியத்தில் இருந்து அனுப்பப்பட்ட கடிதம் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.14 | 28.09.2016 | தேதியிட்ட மின்சார வாரியத்திற்கு பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு நகல் |
| எ.ம.சா.ஆ.15 | – | அஞ்சல் ஒப்புகை அட்டைகள் (எண்ணிக்கை – 4) |
| எ.ம.சா.ஆ.16 | – | மின் கட்டண ரசீதுகள் (எண்ணிக்கை – 15) |
| எ.ம.சா.ஆ.17 | – | வங்கி கணக்கு விபர பட்டியல் |
| எ.ம.சா.ஆ.18 | – | மின் கட்டண ரசீதுகள் (எண்ணிக்கை – 13) |

**<u>நீதிமன்ற தரப்பு சான்றாவணங்கள்</u>** :–

| | | |
|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | – | நீதிமன்ற ஆணையர் அறிக்கை |

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.11.19 18:13:29 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.